**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2017**

---

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

#### 2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 1 இல் பந்தி இலக்கம் 21 இன் பிரகாரம் நிதியத்தின் உரிமை / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 7 இன் பிரகாரம் நிலாவெளி பயிற்சி நிலையத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச்சஸ் காணி ரூபா 126,255,800 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்களாக தனித்தனியே இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராமையுடன் எல்லையற்ற ஆயுட்காலமொன்றைக் கொண்ட காணிக்காக மீளாய்வாண்டிலிருந்து 10 சதவீதம் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. அத்துடன் ரூபா 6,003,155 பெறுமதியான பொத்துவில் சுற்றுலா விடுதியின் சட்டரீதியான உரிமை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு காணப்படுவது கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் வெளிக்காட்டப்படாததுடன் இருப்புப் பொருட்களாக குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 90,972 ஆன 18 விடயங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 விசேட செயற்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,330,004 நிர்வாகச் செலவுகளாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 60,814,119 ஆன செலவுகள் 8 தலைப்புகளுக்கான அட்டுறு செலவுகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை

(இ) மீளாய்வாண்டில் பெற வேண்டிய முதலீட்டு வட்டிக்கான செலுத்த வேண்டிய ரூபா 27,255,491 ஆன நிறுத்தி வைத்தல் வரி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களுக்கான கணக்காய்வு கட்டணத்திற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

------------------------------------------------------------------------

2 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 9,633,185 ஆன கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான மீதி உறுதிப்படுததல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டுக் கணக்கு பரிசோதிக்கப்பட்ட போது 7 மாவட்டங்களின் முற்பணத் தீர்ப்பனவுகள் மற்றும் காசேட்டின் பிரகாரம் முற்பணத் தீர்ப்பனவுகள் இடையே ரூபா 4,684,469 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

சிப்தொர மாதிரிப்படிவங்கள் அச்சிடலுக்காக இரு நிறுவனங்களிடம் பெறப்பட்டிருந்த மீள் செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,050 ஐ தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் சரியான தன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 778,303,990 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,121,745,567 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 343,441,577 ஆன பின்னடைவொன்று காட்டப்பட்டிருந்தது. இப்பின்னடைவிற்கு நிதியத்தின் பயனாளிகள் கொடுப்பனவு ரூபா 410,034,200 ஆல் உயர்வடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1** 1997 சனவரி 01 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான நம்பிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் சமுர்த்தி பயனாளிகளின் நலன்களின் மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான செலவுகள் மற்றும் வசதிகளை வழங்கும் குறிக்கோள் மற்றும் நோக்கத்துடன் இந் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் நிதியத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கத்திற்கு முரணாக மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 5,382,976 செலவிடப்பட்டிருந்தது.

**4.1.2** பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்ற ஏழை மற்றம் சமுர்த்தி பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக ‘‘சேர் அயிவோ ஜென்னிங்ஸ் மன்றம்’’ எனும் மன்றமொன்றுக்கு முன்னாள் குவைத் தூதுவரின் கோரிக்கையின் அடிப்படையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் எழுத்துமூல அறிவிப்பின் பிரகாரம் ரூபா ஒரு மில்லியன் வழங்கப்பட்ட போதிலும் அம் மன்றத்தின் சட்டரீதியான தன்மை அப் பணியை செயற்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் விழிப்புணர்வு மற்றும் ஒப்பந்தம் போன்ற எவ்வித விடயமொன்றும் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந் நிதியம் பல்கலைக்கழகத்தினூடாக நிறுவப்பட்ட நிதியமொன்று அல்ல என்பதுடன் இதன் மூலம் எவ்வித தொகையொன்றும் பல்கலைக்கழகத்திற்கு பெறப்படவில்லை எனவும் துணை வேந்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இம் மன்றத்தின் பேரில் 2017 மார்ச் 20 ஆந் திகதி இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கிற்கு மே 9 ஆம் திகதிய பணம் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் ஆகஸ்ட் 8 ஆந் திகதி நம்பிக்கைப்

பொறுப்பாளரினால் ரூபா 713,000 பெறப்பட்டதன் பின்னர் அத் திகதியில் கணக்கின் எஞ்சிய மீதி ரூபா 287,000 ஆன பணம் குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

**4.1.3** அழகியல் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தியாவின் புதிய டில்லி நகரில் நடைபெற்ற பாரதீய அரச உற்சவத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு அழகியல் பல்கலைக்கழகத்தின் 17 மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கான விமானச் சீட்டுக்களுக்காக ரூபா 816,000 ஆன தொகையொன்று செலுத்தப்படுவதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் இந்த மாணவர்கள் சமுர்த்தி பெறுநர் என்பதற்கும் மற்றும் குறிப்பிட்ட விடயத்திற்காகப் பணம் செயலிடப்பட்டுள்ளது என்பதற்கும் எவ்வித உறுதிப்படுத்தலும் நிதியத்திடம் காணப்படவில்லை.

**4.1.4** சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 ஆம் வருடத்திலிருந்து சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமம் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 52.45 மில்லியன் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கத்திற்கு முரணாக 50 மாதிரி கிராமங்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் ரூபா 500 மில்லியன் வழங்கப்படுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 303,133,240 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்கு உரிய மதிப்பீடு மற்றும் திட்டம் நிதியத்தின் முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டிராததுடன் 50 கிராமங்கள் இனங்காணப்பட்டமைக்கான தகவல்கள் நிதியத்தில் காணப்படவில்லை.

**4.1.5** சுகாதார கழிவறைகள் வசதிகளை வழங்குவதற்காக கட்டுவான பிரதேசத்தில் மற்றும் சேருவாவில நெலும்கம போன்ற பிரதேசங்களில் திவிநெகும பயனாளிகள் 20 பேருக்கு மொத்தம் ரூபா 700,000 செலுத்துவதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க 100 பயனாளிகளுக்கு ரூபா 3,500,000 செலுத்தப்பட்டிருந்தது. இதில் சுகாதார சேவைகள் வழங்கப்பட்டிருந்த பயனாளிகள் சமுர்த்தி பெறுநர்களாக என்பது உறுதிப்படுத்தப்படாததுடன் இத்தொகை உரிய காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பான பின்தொடரல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 மனிதவள முகாமைத்துவம்

சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் பணிப்பாளர் பதவி 2018 ஆம் ஆண்டிலிருந்தும் மற்றும் கணக்காளர் பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் நிரந்தரமாக ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்றி பதிற்கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(இ) பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் , 04 வருட கால தாமதத்தின் பின்னர் 2021 திசெம்பர் 8 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின்

அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டமொன்று மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவி கணக்குப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.